திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, அவை அச்சிடப்பட்டு வழங்கப்பட்டனவா? விலைக்கு விற்கப்பட்டனவா? அப்படி விற்றதால் எவ்வளவு லாபம் கிடைத்தது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: அரசாங்கத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இது ஒரு இந்திய அமைப்பு. மத்திய அரசு மூலமாக யுனெஸ்கோ அனுப்புவது. அதை நாம் கொடுத்தோம்.

Official language

* 142 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) the resolution passed regarding the medium of instruction and the official language at the State Education Ministers' Conference held at Delhi, recently; and

(b) the views expressed by the Tamil Nadu Education Minister on behalf of the Government of Tamil Nadu?

ஆட்சி மொழி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) அண்மையில் டில்லியில் நடைபெற்ற மாநில கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், பயிற்சி மொழி, ஆட்சி மொழி பற்றி என்ன தீர்மானம் நிறைவேற்றப் பட்டது?

(இ) தமிழக அரசு சார்பாக கல்வி அமைச்சரால் என்ன பேசப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) உயர்நிலைக் கல்வி நிறுவனங்கள் எல்லாவற்றிலும் வட்டார மொழியையே பயிற்சி மொழியாகக் கொள்ளவேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆட்சிமொழி குறித்துத் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

(இ) வட்டார மொழியே எல்லா நிலையிலும் பயிற்சி மொழியாக இருக்கவேண்டுமென்கிற பரிவுரை இம்மாநில அரசின் முழு இசைவுபெற்றுள்ளதென அம்மாநாட்டில் எடுத்துக் கூறப் பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, மத்திய சர்வீஸ் கமிஷன் பரீட்சை 14 மொழிகளிலும் எழுதலாம் என்று கூறியதாகச் செய்தி பத்திரிகையில் வந்தது. அதைப் பற்றிப் பேசப்பட்டது. அதைப் பற்றி இந்த அரசு என்ன நினைக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: மகாநாட்டில் பேசியதைப் பற்றித் தகவல் இல்லை. 14 மொழிகள் வருமென்று மத்திய அரசு நீண்டநாளாகச் சொல்லிவருகிறது.